1993 ஏப்ரல் 29] [திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி]

" 1993ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் சார்ந்த (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1993) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்).
மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை).
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
சட்ட முன்வடிவு ஏற்கப்பட்டது.

10. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(எ) மாநில நூலகக் குழுவிற்கும், தமிழ்நாடு கால்நடை மற்றும் மருத்துவப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கும் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

மாநில நூலகக் குழுவிற்கும், தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் மருத்துவப் பல்கலைக் கழக நிர்வாகக் குழுவிற்கும் பேரவை உறுப்பினர்களிடமிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களுடைய தேர்வுக்கான முறையாக நியமிக்கப்பட வேண்டிய எண்ணிக்கை அளவிற்கே உறுப்பினர்களிடமிருந்து வேட்புத் தாள்கள் பெறப்பட்டிருக்கின்ற காரணத்தால் முறையாக வரப்பெற்ற நியமனத் தாள்களிலிருந்து கீழ்க்கண்ட உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கின்றேன்.

மாநில நூலகக்குழு உறுப்பினர்—திரு. கே. முனிவெங்கடப்பன்.

தமிழ்நாடு கால்நடை மற்றும் அறிவியல் மருத்துவப் பல்கலைக் கழக நிர்வாகக் குழு உறுப்பினர்—திரு. மா. கோவிந்தராசு.

பேரவையின் இன்றைய நிகழச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30—4—1993) காலை 10 மணிக்குக் கூடும், வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-53 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.